


# தமிழ்ச்சிட்டு

## சிறுவர் கலையிதழ்



## நானும் பழையவன்! எண்ணமும் பழையது!

என்னை நினைத்தேன்;
எண்ணம் வந்தது!
வந்த எண்ணம்
எழுத்தாய் வடிந்தது!
வடிந்த எழுத்தைத்
தாளில் வாங்கினேன்!
வாங்கிய தாள்களை
வடித்தனர் அச்சில்!
அச்சில் வடித்ததைப்
பொத்தகம் ஆக்கினர்!
ஆக்கிய பொத்தகம்
அனைவரும் வாங்கினர்!
வாங்கிய அனைவரும்
வழியில் தொலைத்தனர்!
தொலைந்த பொத்தகம்
அலையாய் அலைந்தது!
அலைந்தபின் ஒருநாள்
என்னை அடைந்தது!
அடைந்தது புதிதென
ஆசையாய்ப் படித்தேன்!
படித்தது மீண்டும்
என்னுள் பதிந்தது!
பதிந்தது ஒருநாள்
பழைய படியே,
என்னை நினைக்கையில்
எண்ணமாய் வந்ததே!

குரல் : 6
இசை : 10

விலை:
25 காசு.

# எலிகள்!

குடியிருக்கும் வீட்டை, எலிகள்
குடைந்து வளையைக் கட்டுமாம்!
அடியி லிருக்கும் கல்லும் மண்ணும்
அள்ளி மேலே கொட்டுமாம்!

திருட்டுத் தனமாய் இரவில் வந்து
தின்பண் டத்தை உருட்டுமாம்!
உருட்டி வைத்த அப்ப ளத்தை
உதறி மண்ணில் புரட்டுமாம்!

வெண்ணெய், பருப்பு, வெல்லம், புளியை
வேறு வேருய் மாற்றுமாம்!
எண்ணெய்க் குப்பியை இழுத்துத் தள்ளி,
எங்கும் வழிய ஊற்றுமாம்!

சீயற் காயைக் கடித்துக் குதறிச்
சீரகத்தை இறைக்குமாம்!
காய வைத்த வற்றல், வடகக்
கணக்கைக் கொஞ்சம் குறைக்குமாம்!

தேங்காய்க் கீற்றைத் தேடிப் பிடித்துத்
தின்று துணுக்கைச் சிதறுமாம்!
பாங்காய் வைத்த புதிய துணியைப்
பார்த்துக் கடித்துக் குதறுமாம்!

சீப்பின் பல்லை வளைத்துக் கொறித்துக்
சிவப்புச் சாந்தைக் குழப்புமாம்!
பாப்பா வின்மேல் இரவில் விழுந்து
பதறி யடித்தே எழுப்புமாம்!

சவர்க்கா ரத்தைக் கடித்துத் தின்னும்!
சுவடிக் கட்டை உண்ணுமாம்!
சுவர்க்கு மேலும் கதவின் மேலும்
சுட்டி நடனம் பண்ணுமாம்!

விட்ட செருப்பைத் தொட்டுக் கொண்டு
வெளியிற் போக எண்ணிஞல்,
பட்டை பிய்ந்து தொங்கும்; எலியின்
பற்கள் தெரியும்; எண்ணலாம்!

குஞ்சு பொறிக்கும்; குடும்பம் பெருக்கும்!
கூத்தும் பாட்டும் இரவுதான்!
மிஞ்ச விட்டால் எலிகள் தொல்லை
மேலும் மேலும் வரவுதான்!

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்

சிறுவர் கலையிதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்–6. | தி. பி. உ௲௩. நளி–சிலை (திச. 72–சன 73) | இசை 10


## அன்பும் அறிவும் - 3.

ஒரு வட்டப் பாதையில் தனிப்பட இயங்கும் ஒருவர் அன்பையும் அறிவையும் எதிரெதிராகவே ஓடவிடுதல் இயலும். குழந்தைத் தன்மையிலேயே அவை இரண்டும் ஒன்றாகப் பொருந்தி யிருக்க முடியும். அன்புடன் விளையாடும் குழந்தையை ஓர் ஒலியோ, மணியோசையோ, நன்றாகப் பளிச்சென்று கண்களைக் கவருமாறு வண்ணம் பூசப் பெற்ற ஒரு பொம்மையோ அதன் கவனத்தை ஈர்க்கு மாறு செய்யலாம். அக்கால் அக்குழந்தை அறிவு நிலையைப் பற்றுகின்றது என்று சொல்லலாம். அவ்வாறு அவற்றில் ஈடுபடும் குழந்தையை அதன் அன்னையோ, அதனிடம் மிக ஈடுபாடு கொள்ளும் பிறரோ அன்புடன் அழைத்துச் சிரித்துப் பேசிக் கைகளை நீட்டு வார்களானால், அதுவும் அவ்விளையாட்டுப் பொருள்களை விட்டு விட்டு அவ்வன்புக் கைகளில் ஓடோடி வந்து விழுந்து மகிழ்கின்றது அக்கால் அதன் அறிவுணர்வு மாறி, அன்பு நிலையை அது பற்றுவ தாகக் கொள்ளலாம். இவ்வாறு குழந்தைமைப் பருவத்தில் ஒருவர்க் கிருக்கும் அன்புணர்வும் அறிவுணர்வும் ஒரே படித்தாய் இயங்கி, அது மேன்மேலும் வளர்ந்து வருகையில் அறிவுணர்வு, அன்புணர்வினின்று சிறிது மாறுபட்டு வளருவதையும் தெளிவாக உணர முடியும்.


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

பத்தாண்டு அல்லது பதினைந்தாண்டு வளர்ந்த பையனையோ பிள்ளையையோ, தாயோ பிறரோ அழைக்கையில். அவர்களின் அறிவுணர்வின்பாற் பட்ட விளையாட்டுக் கவனத்தையோ, கல்வியில் செலுத்தும் கருத்தையோ, எளிதில் விட முடியாதவர்களாய் 'இதோ வருகின்றேன்' என்று விடை பகருவதும், அல்லது 'இன்னுங் கொஞ்ச நேரம் கழித்து வருகின்றேன்' என்பதும், அல்லது 'வர மாட்டேன் போங்கள்' என்று மறுத்துரைப்பதும் இல்லையா? அக்கால் அவர்களின் அன்புணர்ச்சி யினின்றும் அறிவுணர்ச்சி வேறு பட்டு அல்லது மாறுபட்டு இயங்குவதாக உணர்ந்து கொள்க!

இனி, மிக வளர்ந்து பெரியோனாகிய ஒருவன் அல்லது ஒருத்தி, அன்பு ஈடுபாட்டினின்று மிக வேறுபட்டு அறிவு ஈடுபோடு கொள்ளு வதையும், வேறு சிலர் அறிவுணர்ச்சியினின்று மாறுபட்டு அன்பு ஈடுபாடு கொள்ளுவதையும் பொதுவாகப் பார்க்கலாம். அக்கால் அவர்களிடம் அன்பும் அறிவும் நேர் எதிரிடையாக வளரும் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய வேண்டும். அத்தகையவர்கள் தொடர்ந்து ஒரே நிலையில் ஈடுபடுவது கடினம். ஒன்றில் ஈடுபடுகையில் மற்றொன்றில் அவர்கள் கவனம் செலுத்துவதே இல்லை. அக்கால் அவர்களின் பெரும் பகுதியான கவனமும் ஏதாவது ஒன்றின் வழி யாகவே செல்லுகின்றது. ஒருகால் அவர்களுக்கிருக்கும் அன்பு மெது வாகவும், அறிவு விரைவாகவும் வட்டச் சுழற்சியில் ஈடுபடலாம். அல்லது அறிவு மெதுவாகவும் அன்பு விரைவாகவும் வட்டச் சுழற்சி யில் ஈடுபடலாம். அதுவுமல்லாது, இரண்டும் ஒரே வேக அமைப்பில் அவ் வட்டச் சுழற்சியில் ஈடுபடலாம்.

ஆணைப் பெண் விரும்புவதும், பெண்ணை ஆண் விரும்புவதும், இணைந்து குடும்பம் செய்வதும், பல்வேறு வாழ்க்கை நிலைகளில் ஏதாவதொன்றில் ஈடுபடுவதும் போன்ற செயல்கள் அக்கால நிலை களில் நிகழ்கின்றன. அன்பும் அறிவும் மாறி மாறியோ, முன் பின்னாகவோ, இணைந்தோ அவர்களை ஆட்கொள்ளும். அவர்களுக் கிருக்கும் மூலப்பொருள்களின் இணைப்பைப் பொறுத்தது, அவ்வாட்சி. அம் மூலப் பொருள்கள் பருப்பொருள்களாலும், நுண் பொருள் களாலும் ஏற்பட்டவையாக இருக்கும். அவைபற்றி யெல்லாம் பிறகு தெரிந்து கொள்ளலாம். அத் தொகுதி யமைப்பு தனியாக விளங்கிக் கொள்ள வேண்டிய பூத நிலைகளாகும். ஓரளவு இங்கும் சொல்லப் படும்.


இவ்விடத்தில் இன்னொன்றையும் நீங்கள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். அஃதாவது, ஒருவனுக்கோ ஒருத்திக்கோ இருக்கும்

அன்போ அறிவோ அவற்றின் வேறுபடியான படிநிலைகளோ முழுக்க முழுக்க அவர்களாகவே உண்டாக்கிக் கொண்டன அல்ல. இதனை இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால்தான் நன்கு விளங்கும். ஒருவர்க்கு அன்பு மிகுந்தோ குறைந்தோ இருப்பதாக நீங்கள் உணருவீர்களானால், அந்நிலை அவர்களாகவே விரும்பிச் செய்து கொண்ட நிலையன்று. அதேபோல் ஒருவர்க்கு அறிவுணர்வு குறைந்தோ மிகுந்தோ இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், அதுவும் அவர்களாகவே விரும்பிச் செய்து கொண்ட நிலையன்று. அவ்வுணர்ச்சிகள் பெரும்பாலும் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்தவையாகும். அவ்வியற்கையமைப்பு என்பது அவர்களின் நுண்பொருள் உணர்வுச் சேர்க்கையும் பருப்பொருள் உணர்வுச் சேர்க்கையும் என்பதாக மட்டும் இக்கால் அறிந்து வைத்துக்கொள்ளுங்கள். அவற்றின் விரிவுகளெல்லாம் வேறுவகையான அடிப்படை விளக்கங்களைப் பெற்ற பின்னர்தான் விளங்கும். இப்பொழுதைக்கு அவ்வியற்கை அமைப்புகளைச் சூழ்நிலைகள், அஃதாவது இயல்பூக்கச் சூழல்கள் என்று மட்டும் விளங்கிக் கொள்ளுங்கள். அப்படியென்றால், ஒருயிர் அல்லது மாந்தன் பிறந்து வளரும் சூழ்நிலை, அவன் உள்ளுணர்வுகள் அமைவதற்குக் கரணியமாக உள்ளது என்பதாகும். அவ்வுயிரோ, அவரோ தோன்றி வாழ்கின்ற இடத்தையும், காலத்தையும், பொருட் கூறுபாடுகளையும் பொறுத்தவை அவர்களின் அன்புணர்வும் அறிவுணர்வும். சூழப்பெற்ற இயற்கை நிலைகளால் ஊக்கப் பெறுகின்றவை அவ்வுணர்வுகளாகையால், அவர்களை உருவமைக்கும் அச்சூழல்களுக்கு இயல்பூக்கச் சூழல்கள் எனப் பெயர் கொடுத்தோம். அவ்வுயிர்களின் உணர்வு நிலைகளை ஊக்கப்படுத்தி விளங்க வைக்கும் சூழ் நிலைகள் என்று அதற்குப் பொருள். எனவே ஒருவரின் மிகுந்த அன்பு முதிர்வுக்கும், அல்லது அறிவு முதிர்வுக்கும் அவர்கள் பெரும்பாலும் தோன்றி வளர்ந்த சூழல்களே கரணியங்களாகும். இவ்விடத்தில் பெரும்பாலும் என்று குறித்ததையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் சிறுபான்மை அவர்களின் தனித்தன்மைகளும் அவ்வுணர்வு நிலைகளில் கலந்துள்ளன என்பது அதன் உட்பொருள். இத்தனித்தன்மைதான் அவரின் நுண்பொருள் சேர்க்கையாகும். மற்று சூழலால் அமையப் பெறும்–அஃதாவது இயல்பூக்கச் சூழல்களால் உருவாக்கப் பெறும் உணர்வு நிலைகளோ, பருப்பொருள் சேர்க்கையாகும். இவற்றைச் சில உவமைகளால் விளக்கினால் நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள்.

இவ் வடிப்படைகளின்படி, மலைகளில் பிறந்து வாழ்கின்றவர்களுக்கு, வெற்று நிலப் பகுதிகளில், அல்லது பாலை நிலப்பகுதிகளில்

உள்ளவர்களை விட அன்புணர்வு மிகுந்திருக்கும். அறிவுணர்வு மிக மிகக் குறைந்திருக்கும். ஏனெனில் அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்தே, அல்லது பலரும் கூடியே வாழ வேண்டியுள்ளது. தனித்த ஒருவரால் அம் மலைப்பகுதிகளில் வாழ்தல் கடினம். விலங்குகளுக்கு அஞ்சியோ, வாழ்நிலைக்குத் துணை வேண்டியோ அவர்கள் இணைந்தே வாழ்வார்கள். அவ்வாறு இணைவதற்கு அவர்களிடத்தில் அன்புணர்வு மிகுந்திருக்க வேண்டுவது இன்றியமையாதது. அறிவுணர்வு அவர்களுக்குள் வேறுபாடுகளை உண்டாக்கக் கூடுமாகலின், அது குறைவாகவே இருக்க வேண்டி உள்ளது. மேலும் அவர்களுக்கு அறிவுணர்வு ஏதோ சூழல்களில் கூடுமானால் அவர்கள் மலைகளினின்றும் கீழ் இறங்கி அதனை அடுத்த பகுதிகளுக்குப் படிப் படியாக வந்து விடுவார்கள். அவர்கள் வாழ்கின்ற சூழல்களே அவர்கள் உள்ளுணர்வுகளின் விளங்கல் தன்மைக்குக் கரணியமாக இருப்பதால் தான், அவற்றை இயல்பூக்கச் சூழல்கள் என்றோம். பிறவற்றைப் பிறகு பார்க்கலாம்.

—தொடரும்.



---

## கூற முடியுமா ?

1. ஒரு செவ்வக விளையாடுமிடமொன்றின் நீள அகலங்கள் 2:1 என்ற சமன்பாட்டில் உள்ளன; ஆனால் அவற்றின் சுற்றளவும் பரப்பளவும் சமமாய் உள்ளன. அந்தச் செவ்வகத்தின் நீள அகலங்கள் என்ன?

2. ஒரு செவ்வக விளையாடுமிடத்தின் நீள அகலங்கள் 2:1 என்ற சமன்பாட்டில் உள்ளன. ஆனால் அச்செவ்வகத்தில் பாதியை, ஒரு சதுரமாகப் பிரித்தால் கிடைக்கும் சதுரத்தின் பரப்பளவும் செவ்வகத்தின் சுற்றளவும் சமமாயிருக்கும். மேலும் செவ்வகத்தின் சுற்றளவானது அச்செவ்வகத்தின் பரப்பளவின் பாதியாக இருக்கும். இப்பொழுது அந்தச் செவ்வகத்தின் நீள அகலங்களை உங்களால் கூற முடியுமா?

விடைகள்:-

1 $6,3 = 6 \times 3 = 18\ (6+3+6+3=18)$

2 $12,6 = 6 \times 6 \approx 6+12+6+12,\ 36:72$

—ப. ஆறுமுகம், வத்தக் கவுண்டன் வலசு.

---

# உங்களுக்குத் தெரியுமா?

—ப. ஆறுமுகம்.
வத்தக்கவுண்டன் வலசு

1. ஒரே நேரத்தில் தோன்றும் ஒளி, ஒலி இவற்றில் எது முதலில் கேட்கும்? ஏன்?
2. சீழ் எவ்வாறு உண்டாகிறது?
3. நீர்வேட்கை என்பது என்ன?
4. தலை கீழாக நின்று உணவை விழுங்க முடியுமா? எவ்வாறு?
5. நெஞ்சத் துடிப்பு, நாடித்துடிப்பு என்பவை எவ்வாறு ஏற்படுகின்றன?
6. நொதிமங்கள் (Enzymes) என்றால் என்ன?
7. புரை ஏறுதல் என்றால் என்ன?
8. கடல் ஏன் நீல நிறமாக உள்ளது?
9. எச்சிலைத் துப்புவது தவறு? ஏன்?
10. கண்ணீரில் உப்புக் கரிப்பது ஏன்?

விடைகள்:

*1.* ஒளியின் வேகம், நொடிக்கு ஓரிலக்கத்து எண்பத் தாறுயிரம் கல். ஒலி நொடிக்கு ஆயிரத்து நூறு அடி வேகத்தில்தான் செல்லும். எனவே ஒரே நேரத்தில் தோன்றும் ஒளி, ஒலி இவற்றில் ஒளிதான் முதலில் தெரியும்.

2. உடலில் காயம் ஏற்படும் பொழுது நோய் நச்சுயிரிகள் உட்புகுகின்றன. காயம் ஏற்பட்ட பகுதிகளுக்கு வெள்ளணுக்கள் விரைந்து செல்கின்றன. இவ்வணுக்கள் குருதித் தந்துகிகளின் வழியாய்ப் புகுந்து வெளிப்படுகின்றன. எனவே எங்கு நோய் நச்சுயிரிகள் உள்ளனவோ அங்கு வெள்ளணுக்கள் நேராகச் சென்று அடைகின்றன. தேவையான வெள்ளணுக்கள் எலும்பின் உட்கொழுப் பால் உண்டாக்கப்படுகின்றன. இவ்வணுக்கள் நோய் நுண்ணுயிரிகளைப் போரிட்டு அழிக்கின்றன. அப்பொழுது பல வெள்ளணுக்கள் அழிவுறுகின்றன—இறக்கின்றன. இவ்வாறழிந்த வெள்ளணுக்களே சீழாக வெளியேறுகின்றன. சிரங்குக் கொப்

புளங்களிலிருந்தும், புண்களிலிருந்தும் வெளிப்படும் சீழின் வெண்மை நிறம், உடலைக் காப்பதில் இறந்துபட்ட வெள் ளணுக்களேயாம்.

3. அரத்தம் உடலிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் சென்று உணவுச் சாரத்தையும், உயிர்வளியையும் ஆங்குள்ள அணுக் களுக்குக் கொடுத்து, அவ்விடத்தில் ஏற்படும் கழிவுப் பொருள்களை ஏற்றுக் கொண்டு வந்து கழிவு உறுப்புகளுக்குத் தருகிறது. இச்செய்கைகளின் பொழுது, எக்காரணியத்தாலாவது குருதியிலுள்ள தண்ணீரின் அளவு குறையுமாயின், அதன் நீர்மத் தன்மை குறை கிறது. இந்நிலையைச் சீர்படுத்தத் தண்ணீர் தேவைப்படுகிறது. இத் தண்ணீரின் தேவையே நீர் வேட்கையாக நமக்கு உணர்த்தப் படுகிறது. இதுவே நீர்விடாய் (தாகம்). குருதியிலுள்ள நீரின் அளவு சரிப்பட்டு விட்டால், வேட்கை உணர்ச்சி மறைந்து விடுகிறது.

4. உணவுக் குழலின் உட்சுவர்கள் நீள, வட்டத் தசைகளினுல் ஆனவை. வட்டமான தசை சுருங்கித் துளையைச் சிறிதாக்குகிறது. அதே பொழுது நீளத் தசை சுருங்குவதால் குழலின் முன்பக்கம் அகலுகிறது. எனவே முன்புறம் (உள்ளே) தள்ளப்பட்ட விழுங்கப் பட்ட உணவு, மீண்டும் பின்புறம் (வெளியே) போக முடியாமல் தடுக்கப்படுகிறது. எனவே தலைகீழாய் நின்று உணவை விழுங்கலாம்.

5. நெஞ்சாங்குலையிலுள்ள குழிவுக்கண்ணறைகள் (Ventricles) சுருங்கும் பொழுது, ஈரிதழ், மூவிதழ் கொண்ட மூடிதழ்களின் (Valves) வழிகள் அடைபடுகின்றன. அப்பொழுது 'லப்' (Lup) என்ற ஒலி உண்டாகிறது. இச்செயல் முடிவடைந்ததும், நுரையீரல் பெருநாடி களின் துவக்கங்களில் உள்ள பிறைவடிவ மூடிதழ்கள் அடை படுகின்றன. அப்பொழுது 'டப்' (dup) என்ற ஒலி உண்டாகிறது. இவ்வாறு 'லப்' 'டப்' என்னும் ஒலிகள் மாறி மாறி ஏற்படுகின்றன. இவ்வொழுங்கான ஒலி இயக்கமே நெஞ்சத் துடிப்பு எனப்படும். அரத்தம் பெருநாடி (தமனி) யிலும், குருதிக் குழாய்களிலும் அலை அலையாய்த் துள்ளித் துள்ளிச் செல்லும். இவ்வாறு குருதி அலை அலையாய்ச் செல்வதால் குருதிக் குழாய்கள் விரிந்து சுருங்குகின்றன. இவ்விரிவு-சுருக்க அலைகளை நாடித் துடிப்பு எனப்படும். நெஞ்சத் துடிப்பைப் பொறுத்தே நாடித்துடிப்பு அமையும்.

6. உணவிலுள்ள கரையாச் சாரங்களைக் கரைக்கச் சில வினைவேக மாற்று வேதியல் சாரங்கள் தேவைப்படுகின்றன. இவ்வினைவேக மாற்றுச் சாரங்களே நொதிமங்கள் (Enzymes) எனப் படுகின்றன. நொதிமங்கள், நமது உடலில் உள்ள சில சுரப்பிகளில் சுரக்கப்படும் நீர்களில் காணப்படுகின்றன.

7. நாம் உணவு உட்கொள்ளும் பொழுது குரல்வளையின் மூடி திறந்து மூச்சுக் குழலை அடைத்து, உணவுக் குழலுக்கு வழி விடுகிறது. சில சமயங்களில் விரைவாக உணவு உட்கொள்ளும் பொழுது, சில உணவுத் துணுக்கைகளோ அல்லது தண்ணீர்த் துளிகளோ மூச்சுக் குழலினுள் புகுந்து விடுகின்றன. இதைத்தான் 'புரை ஏறுதல்' என்கின்றோம். அப்பொழுது கண்களில் நீர் துளும்பும்; இருமல் உண்டாகும்.

8. ஞாயிற்றொளியின் வெண்ணிறம் ஊதா (Violet), கருநீலம் (indigo), நீலம் (blue), பச்சை (green), மஞ்சள் (yellow), செம்மஞ்சள் (orange) சிவப்பு (red) என்ற ஏழு நிறங்களை உடையது. இவ்வொளி கடல் நீரில் படியும் பொழுது, ஆழத்தில் உள்ள நீர்க் கூட்டணுக்கள் அவ்வொளியைச் சிதறவைக்கின்றன. இச் சிதறலின் பொழுது ஞாயிற்றொளியின் வெண்ணிறம் தனித் தனியாகப் பிரிகின்றன. மற்ற வண்ணங்களைக் காட்டிலும் நீல நிறமே மிகுந்த அளவில் மேல் நோக்கி அனுப்பப்படுகிறது. எனவே மேலிருந்து பார்ப்போருக்குக் கடல் நீல நிறமாகக் காட்சியளிக் கின்றது.

9. எச்சிலைத் துப்புவது தவறே. எச்சில்தான் உமிழ்நீர். உமிழ்நீரில், டயலின் (Ptyalin) என்ற நொதிமம் உள்ளது. டயலின் உணவு செரிப்பதற்குப் பயன்படும் ஒரு நொதிமமாகும். எனவே எச்சிலை-உமிழ் நீரை அடிக்கடி வெளியே துப்பிவிட்டால் உணவைச் செரிக்கத் தேவையான உமிழ் நீர் குறைவதால் செரிமானமும் குறையும். எனவே நாளடைவில் உடல் நலம் குறையும். மேலும் எச்சில் துப்புவது சுற்றுப்புற நலத்துக்கு மாறான பழக்கமாகும். அதன் மூலம் நோய் நுண்ணுயிரிகள் வெளிப்பட்டுப் பரவ ஏது வாகும்.

10. மாந்தனும், உயிரிகளும் கடலில் வாழும் சிற்றுயரி களிலிருந்து, படிப் படியாக வளர்ச்சி அடைந்ததாக அறிகின்றோம். நீரிலிருந்து-கடல் நீரிலிருந்து வெளிப்புறத்தையும், சுற்றுப் புறத்தையும் பார்ப்பதற்கு அச்சிற்றுயிரிகளுக்குக் கண் அமைந் திருந்து. எனவே கண் தண்ணீரில் பயன்படும் உறுப்பாக இருந்தது. அவ்வமைப்பே மாந்தனிடமும் காணப்படுகிறது. எனவே மாந்தனின் கண்ணீர்-கண்ணில் உள்ள கண்ணீர்ச் சுரப்பு-உப்பாக உள்ளது என்று கூறப்படுகின்றது. இது கடல் வாழ்வின் அறிகுறி எனக் கருதப்படுகிறது. O

# முத்துமொழிகள்

● மாந்தன் தானுகவே நிமிர்ந்து நிற்க வேண்டும். பிறரால் நிமிர்த்தி நிறகப் பட்டவனுக இருக்கக் கூடாது.
—மார்க்கசு அவுரேலியன்

0 பஞ்சிலே நெருப்பை வைக்கப் பெரிய தீப்பந்தம் தேவையில்லை. ஒரு சிறு கங்கு போதும். அது போல் மனவேறுபாட்டை வளர்க்கச் சிறு ஆசை போதும். —டுமாசு

0 எழுத்தாளர் உயிர்வாழ வேண்டுமானுல் அவரது நூலை விலை கொடுத்து வாங்கிப் படியுங்கள். படித்த பின்னர் நெருப்பி லிடுங்கள். நண்பர்களுக்கு இரவல் கொடுக்காதீர்கள்!
—அறிஞர் ரசுகீன்

0 வாயிலிருந்து கிளம்பும் சொல்லும் வில்லிலிருந்து கிளம்பும் அம்பும் ஒரு போதும் திரும்புவதில்லை. —ஓர் அறிஞன்

0 மாந்தர்கள் செய்யும் தீய செயல்கள் அவர்கள் இறந்த பிறகும் நிலைத்து நிற்கின்றன. ஆனுல் அவர்களின் நல்ல செயல்கள் அவர்களோடே புதைக்கப்படுகின்றன. —சேக்சுபியர்

0 கெட்ட நடவடிக்கைகள் தொடக்கத்தில் இன்பமாயிருந்தாலும் முடிவில் கொடுந் துன்பக் காட்டுக்குத்தான் அழைத்துச்செல்லும்.
—தாம்சன்.

(தொகுப்பு: ஏ. சு. நடவரசன்)

0 அருளினும் பெரிய அறமில்லை. மன்னித்து விடுதலிலும் ஆற்றல் மிக்க கருவியில்லை. —குருநானக்

0 நாவுதான் மாந்தனிடம் உள்ள நல்ல உறுப்பு ஆகும். கெட்ட உறுப்பும் அதுவேதான். அது நம் வயமானுல் அதைவிட உயர்ந்த பொருள் இல்லை. நாம் அதன் வயமானுல் அதைவிடத் தீய பொருளில்லை. —அனுர்கரிசு

0 மூடிய கைகளுடன் மாந்தன் உலகிற்கு வருகிருன். திறந்த கைகளுடன் அவன் அதைவிட்டுப் போகிருன்.
—இந்தியப் பழமொழி

0 செல்வம் போதுமான அளவு இருந்தால் அஃது உன்னைத் தூக்கிச் செல்லும். அளவுக்கு மிகுந்து விட்டால் நீதான் அதைத் தூக்கிச் செல்லல் வேண்டும். —யாரோ

(தொகுப்பு: செல்வி. இரா. கதிர்மதி.)

# § அறுபது பொங்கல்

(அறுபது அகவைக் கிழவி, தன் பெயர்த்தியிடம் சொல்கின்றாள்)



நீண்ட சுருட்குழல்
சேல்விழி மேவியென்
நெஞ்சை யிழுத்திடும்
பாவையே,
ஆண்டுக் கொருமுறை
பொங்கல் வந்தே, உளத்
தாக்கிய கூத்தினைக்
கேளடி ! 1

பொங்கல் பிறக்குமுன்
நான் பிறந்தேன் எனப்
பெற்றவர் என்னிடம்
சொல்லியே,
பொங்கி மகிழ்ந்து
மகிழ்ந்தத னால், இரு
பொங்கல் கழிந்தது
வல்லியே ! 2

மூன்று கழிந்தது; நான்கு கழிந்ததென்
முல்லைப்பல் கண்டு மகிழ்ந்தனர்;
ஆன்று சிறந்த தமிழ்மொழி யை, என்றன்
அன்னை எனக்கறி வித்தனள். 3

பள்ளியிற் குந்தினேன்! ஐந்தெனப் பொங்கல்
பறந்தோடி வந்ததே! ஆறினில்,
துள்ளி மகிழ்வுட னுடுதற்கே என்றன்
தோழிகளும் உடன் சேர்ந்தனர்! 4

---

§ 1952-ஆம் ஆண்டுப் பொங்கலுக்கென்று எழுதிப் 'பகுத்தறி'வில் வெளி வந்த பாடல் இது. சில கருத்துகளுக்காகவு சுவைக்காகவும் மீண்டும் வெளியிடப் பெறுகின்றது.

சிற்றில் கட்டி விளையாடி மகிழ் வெய்திச்
செம்மலர் ஊஞ்சலில் உந்தியும்,
நெற்றி சுழித்திரு நீள்விழி யால், இசை
நேருக்கு நேராக ஆடியும், 5

பூத்த மலர்க் கொம்பை எட்டிப் பிடித்தற்குப்
புன்னை யிலையடி தாவியும்,
கோத்த மலர்ச்சர மிட்டிரு பெண்களைக்
காதலர் ஆக்கியும் ஆடிட, 6

பத்தும் இரண்டும் பறந்து, பதின்மூன்றிற்
பாதியும் தீர்ந்ததப் போதிலே
பத்தரை மாற்றுப் பொன் மேனியென, எனைப்
பார்த்தவர் கூறிடக் கூசினேன்! 7

அன்றொரு பொங்கலில், ஆறுசென்றேன்: மக்கள்
ஆட்டினை மாட்டினை மூழ்க்கியே,
நன்று கழுவிய வாறிருந்தார்; கண்டு
நின்றிருந்தேன்; எனை நோக்கியே, 8

குன்று விரைவது போல விரைந்தது,
கொம்பு வளர்ந்தவோர் காளையும்;
சென்று வளைத்து மடக்கி யடக்கினன்,
செக்கச் சிவந்த வோர் காளையும்! 9

அஞ்சி நடுங்கிய வாறிருந்தேன்; அவன்
அண்டை வந்தேயெனை நோக்கியே,
"வஞ்சி நடுங்கிடல் ஏன்?" எனக் கேட்டனன்,
வாயின் நடுக்கங் காணாதவன்! 10

உள்ளத்தினைப் பறித்தான்; அவன் எண்ணத்தை
ஊன்றிவிட்டான் என துள்ளத்தில்!
அள்ளிப் பருகுநல் லின்பங் கொடுத்திடும்
ஆளனானொரு நாளிலே! 11

வெல்லச் சுவைமொழி பேசியென் உள்ளத்தை
விண்ணுக் கழைத்திடும் பாவையே!
செல்லச் சுவைமொழி கொஞ்சி மகிழ்ந்திடச்,
சென்றன ஐந்தாறு பொங்கலும்! 12

பேழை திறந்தொளி முத்து வெளிப்படல்
போலச் சிரித்திடும் நங்கையே!
தாழை மலர்நிறத் தோடுனைப் பெற்ற, உன்
தந்தையை முன்னர் பெற் றேனடி! 13

ஞாயிறு வந்தது! திங்கள் வருமென
நாட்டங் கொண் டார்மனம் போலவே,
ஆயிரு பத்தைந்து பொங்கலுக் குள்ளேவுன்,
அத்தையைப் பின்னர்பெற் றேனடி! 14

பிள்ளை தவழ்ந்து நடந்து வளர்ந்திடப்
பொங்கல் ஐந்தாறு கழிந்தன!
பள்ளி சென்றான்; படித்தான், எனக் கூறிட
பாதி கடந்தது வாழ்வினில்! 15

கண்ணுக் கிணையெனக் காத்துவந் தேன்; அவன்
காளை நிகர்த்தவன் ஆகினன்!
'பெண்ணுக் கழகது பேணல்' என்றே எனைப்
பார்த்தவர் கூறிப் புகழ்ந்தனர்! 16

வண்டு பறந்து வளைந்து திரிந்திடும்
வார்த்த மலர்க் கருந் தீங்குழல்
பண்டு நடந்த பழமை மறப்பது
போலக் கருமை மறந்ததே! 17

முல்லை முகையெனப் பேசி மகிழ்ந்திட்ட
முத்துப்பல் செத்து முடிவினில்,
'இல்லை'யெனப் பிறர் பேசிக் களித்திட
ஏற்றதடி என்றன் தோற்றமும்! 18

சந்தனத் தூளினைப் பூசிக் கழுவிச்செஞ்
சாந்தினைப் பூசிக் குளித்தவள்,
குந்தி யெழுந்திடக் கோல் ஒன்று வேண்டிடுங்
கோணி வளைந்தவள் ஆகினேன்! 19

தாமரைச் செம்முகம் என்றும் இருகண்கள்
தாவிடும் வண்டுகள் என்னவும்,
தேமலர்ச் செவ்விதழ் என்னவும், இவ்வுடல்
தேன்சுவை மாநிறம் என்னவும், 20

பேசிப் புகழ்ந்திட்ட பொன்னுடலோ, இன்று
பேரொளி குன்றிட யாவரும்
ஏசித் திட்டி மகிழ் வெய்தும் நிலையினில்
ஏன்திரை யுண்டதோ? கேளடி! 21

காலம் விரைந்ததுன் அத்தை யுளத்திற்குக்
காத்திருந் தானொரு காவலன்!
நீலமலர் விழிக் கானவன்; அன்னவன்
நேரிழை தொட்டிடும் மன்னவன்! 22

உன்னை மணந்திடப் பெற்றெடுத்தாள், ஓர்
ஓவியத்தை! இளங் கன்றினை!
மின்னை விரட்டிடும் சிற்றிடை நீ, எழில்
மேவி வளர்ந்திடும் பைங்கிளி! 23

பாலுலை யேற்றிச் சருக்கரை யிட்டின்பம்
பொங்கிடும் பொங்கல் அறுபதை
வாலைக் கன்னி! என்றன் வாழ்வில் கண்டே, உளம்
வீங்கி மகிழ்ந்திருந் தேனடி! 24

எப்பொங்கல் போன்றேயிப் பொங்கல் இருப்பதால்
என்ன புதுமையென் றேவுளஞ்
செப்புதல் போலச் சிரிக்கும் வகையினைச்
சொல்லடி! பூவின் இள முகை! 25

பண்டுயாம் பொங்கிய பொங்கலில் பார்ப்பனப்
பாதை யிருந்தது! ஈண்டெனில்
தொண்டு விரவி யறிவு படர்ந்துளம்
தோய்ந்த தடிப் புதுப் பாதையில்! 26

செந்தமிழ் நூல்களைக் கண்டுளம் பொங்கிடுஞ்
சிந்தை யிருந்தவர் 'போகி'யில்
வெந்தழலிற் பெருஞ் செந்தமிழ் நூல்களை
வீசி யழித்தனர் பண்டையில்! 27

மூடப் பழக்க வழக்க மழிந்தது!
முன்னையினும் தமிழ்ப் பற்றினை,
நாடிப் பறந்தனர்; எங்கணும் செந்தமிழ்
நாட்டங் கொண்டாரடி மக்களும்! 28

கோவில் குறைந்தது! பள்ளி நிறைந்தது!
கோவர சாட்சி மறைந்தது!
ஆவல் விரைந்தது செந்தமிழ்மேல்! மக்கள்
ஆட்சி மலர்ந்ததிக் காலேயே! 29

அன்றுகண்ட பொங்கல் ஆரியப் பொங்கலாம்!
ஆனுலிது தமிழ்ப் பொங்கலாம்!
நின்று தலைநிமிர்ந் தேறு நடையென
நீ நடந் தாடி மகிழந்திடு! 30

சங்கு நிறைகரை
சூழ்ந்து, பெருவளஞ்
சேர்ந்து விளங்குபொன்
ஞட்டிலே,
'பொங்குக பொங்கல்' என்
றே,வுளம் பொங்கிப்
பொலிந்திடுக தமிழ்ப்
பாட்டிலே! 31



O சிறுவர்களே சிறுமியர்களே!
உங்களுக்கான முத்துப் பாடலீகள் ! 0
உங்கட்கு உணர்வூட்டுவன ! 0
உள்ளத்திற்கு ஒளியூட்டுவன ! 0
0 தமிழ்ச்சிட்டில் வெளிவந்த
பாடல்களின் தொகுப்பு நூல் !
0 அமிழ்தப் பேழை !
ஏராளமான எழிற்படங்கள் நிறைந்த நூல்
வெளி வந்து விட்டது !
விலை: 3-50
பதிவஞ்சல் செலவு: 1-25

**பள்ளிப் பறவைகள்**

(முதல் தொகுப்பு)
கிடைக்குமிடங்கள்:

வள்ளுவர் நூலகம்
19, இலட்சுமிநாயக்கன் தெரு,
இராசிபுரம் (அ.நி) சேலம் மாவட்டம்.

ஆசிரியர்,
தென்மொழி
கடலூர்-1

தொடர்: 10

# பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!

பேரா. மு. வை. அரவிந்தன், கீ. க. மு.

## 12. ஓசைதரும் இன்பம்

ஓசை நயம் வாய்ந்த தொடர்கள் உரைநடைக்கு அழகு தருகின்றன. ஒரு என்ற சொல், உயிர் எழுத்தை முதலில் உடைய சொல்லின் முன்வரின் ஓர் என்று ஆகும் (தொல். எழுத்து-455) ஓர் ஆயிரம், ஓர் இரவு, என்று வரும். 'அன்புக்கு ஒரு அண்ணன்' என்பதில் ஒரு என்று வருவதும், அவளுக்கு என்று ஓர் மனம் என்று வருவதும் பிழை. 'அன்புக்கு ஓர் அண்ணன்' என்றும் 'அவளுக்கு என்று ஒரு மனம்' என்றும் வரவேண்டும்.

பல், கல், சொல், வில் போன்ற சொற்களின்பின் 'கள்' உருபு வரின் பற்கள் கற்கள் சொற்கள் விற்கள் என்று வருவது போல, நூல்+கள் என்பவை சேர்ந்து நூற்கள் என்று வருவதில்லை. நூல்கள் என்றே வரும். கால்கள், வால்கள், விரல்கள், செதில்கள் என்றும், தூண்கள், செய்யுள்கள், பொருள்கள், என்றும் மாறுதல் இன்றிவரும். அதனால்தான் என்பதை அதனாற்றான் என்று எழுதுவது இனிமையாய் இல்லை. எள், கொள், கள் முதலியன மற்றச் சொற்களுடன் சேரும்போது, எள்ளுக்காய் கொள்ளுக்காய் கள்ளுக்கடை என்று 'உ' பெற்று வரும்.

சிறுகுடில் சிறுபொழுது என்பவை போல, சிறு தொண்டன் என்று வருவதே திருத்தமாகும். ஆனால் சிறுத் தொண்டன் என்று இனிய ஓசை கருதி எழுதுவது தொன்று தொட்டுவரும் வழக்காகும்.

ஊர் காவலர், மெய் காப்பாளர் என்பவை போல, முத்தமிழ் காவலர் என்றுதான் எழுத வேண்டும். அவ்வாறு எழுதுவது இனிமையாக இல்லாததால் முத்தமிழ்க் காவலர் என்று எழுதுகின்றனர்.

கல்ச்சட்டி, புல்த்தரை, பல்ப்பொடி என்று சிலர் எழுதி, தமிழ் இலக்கணத்தைப் புறக்கணிக்கின்றனர். தமிழ் இலக்கணத்தை மறப்பவரைத் தமிழும் மறந்துவிடும். அவர்கள் எழுத்தும் காலப் போக்கில் மறைந்துவிடும்!

## 13. சேர்த்தலும் பிரித்தலும்

தேவையான இடத்தில் இடம்விடாமல் சேர்த்து எழுதுவதால் பிழை ஏற்படும். தேவையற்ற இடத்தில் பிரித்து எழுதுவதாலும் பிழை தோன்றும். பொருளும் வேறுபடும். **அந்தமான், அம்மான், அம்மணம், வந்ததாய், பலகைகள்**—ஆகியவற்றைப் பிரித்து எழுதினுல் பொருள் மாறும். **அந்த-மான், அம்-மான், அம்-மணம், வந்த-தாய், பல-கைகள்** என்று எழுதினுல் பொருள் மாறிவிடும் அன்ரோ? சேர்த்தும் பிரித்தும் எழுதினுல் பொருள் வேறுபடும் தொடர்களைக் கிழே காண்போம்:

1. கடவுளை நம்பிக்கையால் தொழுதான்.
   கடவுளை நம்பிக் கையால் தொழுதான்.
2. அவர் அமைச்சராஞல் செய்வார்.
   அவர் அமைச்சர் ஆஞல் செய்வார்.
3. கண்ணனுடனே வந்தான்.
   கண்ணன் உடனே வந்தான்.
4. வணிகன் பணத்தையே மாற்றினுன்.
   வணிகன் பணத்தை யேமாற்றினுன்.
5. ஓர் இளமையான பெண்.
   ஓர் இளமை ஆன பெண்.
6. வேலைக்காரன் வந்தால்தானே செய்வான்.
   வேலைக்காரன் வந்தால் தானே செய்வான்.
7. (போரில் பர்மா தாக்குண்டபோது) எங்கள் சொத்துப் பணமாகவே கிடைத்துவிட்டது.
   ...எங்கள் சொத்துப் பணம் ஆகவே கிடைத்துவிட்டது.

இத்தகைய தொடர்மொழிகளைப் பொருள் தெளிவு ஏற்படும் வகையில் தெளிவாக எழுத வேண்டும். பிரிக்க வேண்டியதைப் பிரித்தும், சேர்க்க வேண்டியதைச் சேர்த்தும் எழுதவேண்டும்.

—தொடரும்.

---


தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம்: | 9 உருபா. | 10-50உருபா | 14உருபா |
| அரையாண்டுக்கட்டணம்: | 5உருபா | 6 உருபா. | 7-50 |
| தனியிதழ்: | 75காசு | 90 காசு | 1-10 |

# உலகப் பழமொழிகள்

—தொகுப்பு: **வலியடியோன்.**

0 விரும்புவதைப் பெற முடியாதாகையால், பெறமுடிவதை விரும்புவோமாக. —இசுப்பானியப் பழமொழி

0 ஒரு சான்றுளனைக் கொண்டு இருவரைத் தண்டிக்காதே. —கிரேக்கப் பழமொழி.

0 குருவிக்குப் பயப்படுகிறவன் தினை விதைக்க முடியாது. —உருசியப்பழமொழி.

0 சினம் குளவிக் கூட்டில் எறியப்படும் கல்லைப் போன்றது. —மலையாளப் பழமொழி

0 முழுக்க முழுக்கச் சருக்கரையாகவே இருந்து விடாதே; உலகம் உன்னை விழுங்கிவிடும். முழுக்க முழுக்க எட்டிக்காயாக இருந்து விடாதே; உலகம் உன்னை உமிழ்ந்துவிடும். —பாரசீகப் பழமொழி

0 பணத்தைப்பற்றிக் கடவுள் என்ன நினைக்கிறார்? எப்படிப்பட்ட ஆட்களுக்கெல்லாம் அதைக் கொடுக்கிறார் என்று பாருங்கள் தெரியும். —ஆங்கிலப் பழமொழி

0 கேள்வி கேட்கத் தெரிவதே பாதி தெரிந்து கொண்டாற் போல. —இலத்தீன் பழமொழி

0 எண்ணாதபடி படித்தால் மனத்திற்குக் குழப்பம் தரும். படிக்காமல் எண்ணினால் மனத்தின் சமநிலையைக் கெடுத்துவிடும். —சீனப் பழமொழி

0 கடவுள் கதவை அடைத்தால், பலகணியைத் திறந்து விடுகிறார். —இத்தாலியப் பழமொழி

0 நீ சினந்து கொள்ளும் ஒவ்வொரு நிமையமும் அறுபது விநாடி மகிழ்ச்சியை இழந்து விடுகிறாய் —ஈபுரு பழமொழி


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 4-50 | 6-00 |
| தனியிதழ் ,, | 0-25 | 0-35 | 0-50 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# கிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர்த் தொடர்ச்சி:-

| கிறித்துவப் பெயர் | அது,எந்த மொழி | அதன் பொருள் | அதற்கேற்ற தமிழ்ப் பெயர். |
| --- | --- | --- | --- |
| டட்லி Dudley | சாக்சானியம் | ஓரிடம். | ஓரிடத்தான், புலத்தான் |
| டியூக் Duke | இலத்தீன் | தலைவர். | தளபதி, முன்னோடி, தலைவன் |
| எர்ல் Earl | சாக்சானியம் | பெருந்தன்மை யானவன். | சான்றோன், ஆண்டகை, பெருந்தகை. |
| ஏட்டன் Eaton | ,, | ஆற்றுப்படுகை. | புனல் நாடன், புனலன், நீர் நாடன். |
| ஏபன் Eben | ஈபுரு. | கல் | கல்லன், கனன், கன்னன். |
| எபினேசர் Ebenezer | ,, | உதவுகல் சுமைதாங்கி. | கற்றுங்கி துணைக்கலன் |
| ஏடன் Edan | கெல்திக். | சுடர். | சுடரோன். ஒளியோன். |
| எட்கர் Edgar | சாக்சானியம். | நல்வீரன். | ஒண்மறவன், நல்விறல். |
| எட்மண்டு Edmund | ,, | செல்வக் காப்பாளன். | புரக்குநன் வள்ளல்,புரவலன் |
| எட்சல் Edsel | ,, | ஆழ் நினைவோன் | கருதுவோன் முன்னியோன். |
| எட்வார்டு Edward | ,, | செல்வப் புரக்குநன். | வள்ளியோன் புரக்குநன். |
| எட்வின் Edwin | ,, | செல்வநண்பன். | திருநள்ளி. திருவன்பன். |
| எக்பர்ட் Egbert | ,, | ஒளிர்வாள். | ஒள்வாளன். ஒளிர்வாள். |
| எல்டன் Eldon | தியுத்தானிக். | மதிக்கத் தக்கவன். | மதிமிகி மாண்பன். |

—தொடரும்

# தமிழ்ச் சொல் வளம்.

குதிரை வகை:

குதிரை-குதிப்பது அல்லது தாண்டுவது;
பாடலம்-விரிந்த கழுத்தும் மார்பும் உடையது;
கோணம் அல்லது கோடகம்-முக்கோணக் கழுத்துடையது;
இவுளி-எதிர்த்துப் போர் செய்வது;
வன்னி-வெண்ணிறமானது; பரி-வேகமாக ஓடுவது;
கந்துகம்-கடைந்த தூண் போன்ற கால்களை யுடையது;
கனவட்டம்-கனமும் உருட்சியு முடையது;
கோரம்-கொடுமையானது; புரவி-மதில் தாண்டுவது.

உடற்பெயர்:

உடல்-உடம்பிற் கைகால் தலையற்ற நடுப்பகுதி;
உடம்பு-முழு உடம்பு (இவை ஆட்சிப் பொருள்கள்);
உடக்கு-உள்ளீடற்ற உடம்புக்கூடு;
யாக்கை-எழுவகைத் தாதுக்களாற் கட்டப் பெற்றது;
மெய்-உயிரை மேலாகப் பொதிந்திருப்பது;
மேனி-உடம்பின் மேற்புறம்.

முதலைவகை:

முதலை (Gavial)-தென்னாசியாவிற் பெரும்பான்மையாக வுள்ள
இடங்கர்(Crocodile)-வட ஆப்பிரிக்காவிற் பெரும்பான்மைய. வுள்ள;
கராம் (Allegator)-தென் அமெரிக்காவிற் பெரும்பான்மையா வுள்ளது.

தவளை வகை:

தவளை-தவிர்த்து அல்லது இடைவிட்டுப் பாய்வது;
அரைத்தவளை-வாலறுத குட்டித் தவளை;
நுணல்-மணலுக்குள் நுழைந்திருப்பது;
தேரை-திரைந்த தோலையுடையது;
சொறியன்-சொறியுள்ளது. மொங்கான்-மிகப் பெறியது.

வான்சுடர்ப் பெயர்கள்:

வெள்ளி-வெண்மையாக இரவில் தெரியும் சிறுசுடர்ப் பொதுப் பெயர்;
நாள்-இருபத்தேழு நாண் மீன்களின் பொதுப்பெயர்;
கோள்-எழுகோள்களின் பொதுப்பெயர்;
மீன்-நாள் மீன் அல்லது கோள்மீன்.
ஓரை-பன்னீர் இராசியின் பொதுப் பெயர்.

கொடி வகை:

கொடி-சிறியது; பதாகை அல்லது படாகை-பெரியது
(பாவாணர்-சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)—தொடரும்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.